செய்தி வெளியீடு எண்: 409 நாள் : 11.08.2016

## பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,

## பத்திரிக்கைச் செய்திக்குறிப்பு

தமிழகத்தில் மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் கீழ் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாக "கற்கும் பாரதம் திட்டம்" கடந்த 2009ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் எழுத்தறிவற்றோருக்கு அடிப்படை எழுத்தறிவு வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது அரியலூர், தருமபுரி, ஈரோடு, பெரம்பலூர், சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது மாவட்டங்களில் 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் 2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வீடு வாரியான கணக்கெடுப்பின் அடிப்படையில் 24.58 இலட்சம் எழுத்தறிவற்றோர் கண்டறியப்பட்டனர். இவர்களுக்கு அடிப்படை எழுத்தறிவினை வழங்கிடும் பொருட்டு, 3602 வயது வந்தோர் கல்வி மையங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 9 மாவட்டங்களில் கிராம பஞ்சாயத்து அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வயது வந்தோர் கல்வி மையங்கள் வாயிலாக, எழுத்தறிவற்றோருக்கு 300 மணி நேரம் கற்பித்தல், கற்றல் செயல்பாடுகள் சார்ந்த மைய பொறுப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டு, ஆண்டுதோறும் ஆகஸ்டு மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் தேசிய மற்றும் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையங்கள் மற்றும் தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்தின் வாயிலாக அவர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை நடத்தி, தேர்ச்சி பெறுபவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அடிப்படை எழுத்தறிவு கற்கும் போதே தொழிற் திறன் வளர்ச்சி சார்ந்த பயிற்சிகளும் வயது வந்தோர் கல்வி மையங்களில் பயிலும் கற்போருக்கு வழங்குவது இத்திட்டத்தின் கூடுதல் சிறப்பம்சமாகும்.

மார்ச் 2016 வரை 22.72 இலட்சம் பேர் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகள் காரணமாக, கடந்த 2013 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் மாநில, மாவட்டம் மற்றும் கிராமப்பஞ்சாயத்து அளவில் தேசிய விருதுகளைப் பெற்று தமிழகம் சாதனை படைத்துள்ளது.

21.08.2016 அன்று 63,794 கற்போர்களுக்கு 3602 வயது வந்தோர் கல்வி மையங்களில் அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை நடத்திட தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் கீழ் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் ஒன்பது மாவட்டங்களில் உள்ள 15 வயதிற்கு மேற்பட்ட வயது வந்தோர் கல்வி மையங்களில் பயிலும் ஆண் மற்றும் பெண் கற்போர் தங்களின் பெயரை சம்பந்தப்பட்ட வயது வந்தோர் கல்வி மையங்களில் வருகின்ற 19.08.2016க்குள் பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். மேலும் இவ்வாறு பதிவு செய்த கற்போர் 21.08.2016 அன்று நடைபெறும் அடிப்படை எழுத்தறிவுத் தேர்வில் கலந்து கொண்டு பயனடைந்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இத்தேர்வு சார்ந்த கூடுதல் விவரங்களுக்கு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6 (தொலைபேசி எண். 044– 28272048, 044–28277039) மற்றும் அரியலூர், தருமபுரி, ஈரோடு, பெரம்பலூர், சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைவருக்கும் கல்வி இயக்கக வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் கற்கும் பாரத திட்டம் சார்ந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரை தொடர்பு கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**